***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 563/2024 |
| | : | Prosecution P.W - 42 |
| NAME | : | சரோஜா |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 22.07.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது வெய்க்காலிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளிடம் தான் நான் சீட்டு போட்டிருந்தேன். அசா.1 கிருஷ்ணன் என்பவரை தெரியும், அசா.2 அந்தோணிராஜ் அசா.3 டேவிட் அமல்ராஜ் ஆகியோரை தெரியாது. அசா.4 செல்வராஜ் அசா.5 ஜோசப்ராஜ் தெரியாது. அசா.6 அருமைகிளி அசா.7 பாலமுருகன் அசா,8 செல்வராணி அசா.9 பூங்கொடி சூசை, அசா.10 சீதாலெட்சுமி அசா.11 ராமலெட்சுமி அசா.12 பொன்பாண்டி, அசா.13 சாந்தி அசா.14 குணசீலன், அசா.15 முத்துலெட்சுமி அசா.16 செல்வகுமாரி ஆகியோரை தெரியாது அசா.17 முருகன் அசா.18 ராமர் மனைவி சரோஜா, அசா.19 குமரேசன் அசா.20 மணிராஜ், அசா.21 பொன் சேகர் அசா.22 சுதா . அசா.23 ரவிகுமார், அசா.24 ஜெயஜோதி, அசா.25 ஜானகி ஆகியோரை தெரியாது. அசா.26 பவளக்கொடி தெரியும் அசா.27 தெய்வகனி அசா.28 செல்வன் அசா.29 குற்றாலராமசுந்தரம் மகன் மாயவன் அசா.30 அருள்ஜெலஸ்டீன், அசா.31 அன்னபூரணி அசா.32 ஜோசப் அந்தோணி ராஜ் ஆகியோர்களை தெரியாது அசா.33 முத்துக்கனியை தெரியும் அசா.34 வசுமதி தெரியும் அசா.35 இருளப்பன் அசா.36 முருகன் ஆகியோரை தெரியாது. அசா.37 கெலின் ஞானபிரகாசம் அசா.38 மரியசுந்தரி அசா.39 தேன் மொழி

ஆகியோரை தெரியாது. அசா.40 புஷ்பவள்ளியை தெரியும். அசா.41 விஜய் தெரியாது. சுமார் 7,8 வருடங்களுக்கு முன்பு ஆஜர் எதிரிகளிடம் நான் சீட்டு போட்டிருந்தேன். எதிரிகள் 7 குழுக்களாக சீட்டு பிரித்தார்கள். நான் ரூ.50000 சீட்டும் ரூ.61000 சீட்டும், ரூ.62000 சீட்டும் சேர்த்திருந்தேன். 3 சீட்டுகளையும் சேர்த்து மொத்தம் ரூ.1,70,000 கட்டி உள்ளேன் சீட்டு பணத்தை ஞாயிற்குக்கிழமை மாலை 7 மணியளவில் மாயவன் கோவிலில் கட்டுவேன்.

சீட்டு பணத்தை ஆஜர் எதிரிகள் வாங்கி வைத்து கொண்டு நோட்டில் எழுதி கொள்வார்கள். அதன் பின்னர் ஒரு நாள் சீட்டு பணத்தை கட்ட சென்ற போது அவர்கள் அங்கு இல்லை ஓடி சென்றதாக சொன்னார்கள். அதன் பின்னர் 7,8 மாதங்கள் கழித்து அவர்கள் வந்த உடன் சென்று கேட்டதற்கு பணத்தை தரமுடியாது என சொல்லி விட்டனர். நோட்டை தீ வைத்து எரித்து விட்டதாக சொன்னார்கள். தற்போது வரை பணம் வரவில்லை. என் குழந்தைகளின் திருமணத்திற்காக சீட்டு பணம் சேர்த்திருந்தேன். என் கணவர் உயிருடன் இல்லை. எதிரி வாத்தியாராக இருப்பதால் சரியாக தந்து விடுவார் என்று கட்டினேன். எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க கிருஷ்ணன் புகார் கொடுத்தார். போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சீட்டுபணம் செலுத்த சென்றபோது அவர்கள் ஊரை விட்டு ஓடி விட்டதாக யார் சொன்னார்கள் என்றால் சீட்டு பணம் கட்ட போகும் போது அங்கு ஆள் இல்லை, சீட்டு கட்ட வந்தவர்கள் ஊரை விட்டு ஓடி விட்டதாக சொன்னார்கள். எதிரி மாயவன் எனக்கு எத்தனை வருடமாக தெரியும் என்றால் 20 ஆண்டுகளாக தெரியும். சீட்டு பணம் நடத்தி ஊரை விட்டு ஓடி விட்டதாக தெரிந்த பின்பு அவர் பணிபுரிந்த பள்ளியில் சென்று கேட்டேனா என்றால் இல்லை. நான் சொல்லும் காலகட்டத்தில் அவர் அங்கு பள்ளியில் வேலை பார்த்தாரா என்றால் தெரியாது. ரூ.1,70,000 நான் கட்டியதாக சொல்லி உள்ள நிலையில் எதிரியை தேடி பள்ளிக்கு சென்றேனா என்றால் அவர் எந்த பள்ளியில் வேலை செய்கிறார் என தெரியாது. ரூ.1,70,000 நான் செலுத்தியதாக சொல்வது ஒவ்வொரு வாரமும் உள்ள ஏலத்தொகையை பொருத்து கட்ட வேண்டிய பணம் மாறலாம் என்றால் சரிதான். கழிவு போக தான் ரூ.1,70,000 எனக்கு தர வேண்டும். ஒவ்வொரு வாரமும் எவ்வுளவு தொகை செலுத்தினேன் என்ற விவரத்தை நோட்டில் எழுதி வைத்து போலிஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் நோட்டில் எழுதவில்லை. நான் முதல் வாரத்தில் ரூ.61000 சீட்டில் எவ்வுளவு கட்டினேன் என்றால் ரூ.400 கட்டினேன். 2 வது வாரம் கோவிலுக்கு. ஒவ்வொரு வாரமும் எவ்வுளவு செலுத்தினேன் என்று எழுதி வைத்துள்ளேனா என்றால் எழுதி வைத்துள்ளேன். எவ்வுளவு பணம் எந்தெந்த வாரம் செலுத்தினேன் என்ற விவரத்தை போலிஸிடம் கொடுத்தேனா என்றால் போலிஸில் எழுதி கொடுத்தேன்.

புகாரில் நான் கையெழுத்து போட்டேனா என்றால் கையெழுத்து போட்டேன். புகாரில் சுமார் எத்தனை பேர் கையெழுத்து போட்டிருக்கிறார்கள் என்றால் 40 பேர் நின்றார்கள் எத்தனை பேர் கையெழுத்து போட்டார்கள் என்று

தெரியாது. சீட்டு பணம் போட்டதாக சொல்லபடும் நபர்கள் அனைவரும் எந்தெந்த வாரம் எவ்வுளவு செலுத்தினார்கள் என்ற விவரத்தை கிருஷ்ணன் சொன்னாரா என்றால் இல்லை. அவரவர்களே சொன்னார்கள். அங்கு வந்திருந்தவர்கள் எவ்வுளவு தொகை வரவேண்டும் என எழுதி கிருஷ்ணன் கையில் கொடுத்தார்கள். நான் கையெழுத்து இட்டதாக சொல்லும் புகாரில் கிருஷ்ணன் கையெழுத்து போடவில்லை என்று சொன்னால் சரிதான். கோவிலின் நன்மைக்காக பல ஆண்டுகள் முன்பாகவே சீட்டு பணம் நடத்தபட்டு வருகிறது என்றால் தெரியாது. நான் கோவில் வரிதாரர் கிடையாது. கிருஷ்ணன் அந்த கோவில் சீட்டு பணத்தின் உறுப்பினரா என்றால் தெரியாது. எங்கள் எல்லோரையும் வழி நடத்தியது கிருஷ்ணன் என்றால் நாங்கள் சென்றோம் கிருஷ்ணனும் சீட்டு போட்டிருக்கிறேன் என வந்தார். நான் செலுத்தியதாக சொல்லபடும் 3 சீட்டுகளிலும் எத்தனை உறுப்பினர்கள் என்று தெரியாது. சீட்டு பண ஏலத்தில் நான் கலந்து கொண்டேனா என்றால் இல்லை. நான் சொல்லும் 3 சீட்டுகளில் யாரெல்லாம் கலந்து கொண்டு சீட்டு பணத்தை எடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

நான் புகார் கொடுத்த நாளில் போலிஸார் விசாரித்தார். நான் சொல்வது போல் இந்த எதிரி எந்த காலத்திலும் சீட்டு பணம் நடத்தியிருப்பது கிடையாது என்பதால் தான் எதிரி தலைமறைவாக இருந்ததாக சொல்லும் நிலையில் அவர் வாத்தியார் என்று தெரிந்திருந்தும் அவர் பள்ளிக்கு சென்று நான் பணத்தை கேட்டது கிடையாது என்றாலும் அது குறித்து எவ்வித புகாரும் கொடுத்தது கிடையாது என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. கோவிலை நிர்வாகம் செய்வது சம்பந்தமாக எதிரியை பழி வாங்க வேண்டும் என்பதற்காக கிருஷ்ணன் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல புகாரை நான் படித்து பாத்திருக்கிறேனா என்றால் எனக்கு படிக்க தெரியாது. என் மகள்தான் படித்தாள் என்னிடம் சொல்லவில்லை. புகாரை எங்கு வைத்து என் மகள் படித்தாள் என்றால் என் மகள் என்னுடன் வந்திருந்தாள். நான் சொல்வது போல் நான் புகார் கொடுப்பதற்கு காவல்நிலையம் சென்றது கிடையாது என்றாலும் என் மகள் என்னுடன் காவல்நிலையம் வந்திருப்பது கிடையாது என்றாலும் சரியல்ல. கூலி வேலை பார்த்து விட்டு ரூ.1,70,000 உண்மையிலே இழந்திருந்தால் சீட்டு பணம் நடத்தாமல்தலைமைறைவாக இருந்த காலத்தில் நான் புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

<u>2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

ரூ.30000 சீட்டிற்கும், ரூ.33000 சீட்டிற்கும் வாரம் ரூ.300 கட்ட வேண்டும் என்றால் சரிதான். ரூ.50000, ரூ.60000, ரூ.61000 சீட்டிற்கு வாரம் ரூ.500 கட்ட வேண்டும் என்றால் சரிதான். ஒவ்வொரு வாரமும் ஏலக்கழிவு போக தான் சீட்டு பணம் கட்டுவோம் என்றால் சீட்டு பணத்தை வாங்கி கொண்டு கழிவு தொகையை தருவார்கள். ரூ.500 செலுத்தினால் அதனை பெற்றுக் கொண்டு கழிவு தொகையை கையில்தந்து விடுவார்கள் என்றால் சரிதான். ஒவ்வொரு

வாரமும் மொத்தம் 8 சீட்டிற்கு ரூ.4000 செலுத்துவேன். ஏலம் எடுத்தவர்கள் கழிவு இல்லாமல் கட்ட வேண்டும் என்றால் சரிதான். 4,5 சீட்டு போட்டவர்கள் அடுத்தடுத்த வாரம் சீட்டு எடுக்க முடியுமா என்றால் முடியாது. இரண்டாவது வார சீட்டு மாயவன் கோவிலுக்கு என்றால் சரிதான். கோவிலில் இருந்து சீட்டு நடத்தியதால்தான் மாயவன் கோவிலுக்கு எடுத்து கொண்டார்கள் என்றால் சரிதான். ஏலம் கேட்கும் நபர்களுக்கு கோவிலில் வைத்து அன்றைய தினமே பணம் கொடுத்து விடுவார்கள் என்றால் சரிதான். சீட்டு நின்னு போனதால் ஏலம் எடுத்தவர்களும் பணத்தை கட்டவில்லை என்றால் சரிதான். ரூ.50000, ரூ.60000, ரூ.61000 ஆகிய 3 சீட்டுகளில் நான் சீட்டு பணம் கட்டினேன் என்றால் சரிதான். 3 வகையான சீட்டுகளும் தனித்தனி சீட்டு என்றால் சரிதான். ரூ.50000 சீட்டு எப்போது ஆரம்பித்தார்கள் என்றால் எதிரிகள் ஊரை விட்டு செல்வதற்கு 10 மாதத்திற்கு முன்பு ஆரம்பித்தார்கள். அதில் எத்தனை வார சீட்டுகள் முடிந்துள்ளது என்றால் ஞாபகம் இல்லை. மொத்தம் எத்தனை சீட்டு என்றால் ஞாபகம் இல்லை. ரூ.61000 மற்றும் ரூ.60000 சீட்டும் எப்போது ஆரம்பித்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை. என்னை விசாரித்தது பெண் போலிஸ் தான். நான் சொல்வது போல் முதல் விசாரணையில் சொன்ன மாதிரி இரண்டாவது ஏதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. எதிரியோ, அவருக்கு வேண்டபட்டவர் யாரோ தனிப்பட்ட முறையில் சீட்டு நடத்தப்படவில்லை என்றால் சரியல்ல.

(1வது எதிரியின் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக இரண்டாசது எதிரி தரப்பு வழக்கறிஞரால் கூறப்பட்டது.)

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

**

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 563/2024 |
| | : | Prosecution P.W - 41 |
| NAME | : | விஜய் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 22.07.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆசிர்வாதபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஓர்க்சாப்பில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அசா.1 கிருஷ்ணன் என்பவரை தெரியும், அசா.2 அந்தோணிராஜ் அசா.3 டேவிட் அமல்ராஜ் ஆகியோரை தெரியாது. அசா.4 செல்வராஜ் அசா.5 ஜோசப்ராஜ் தெரியாது. அசா.6 அருமைகிளி அசா.7 பாலமுருகன் அசா,8 செல்வராணி அசா.9 பூங்கொடி சூசை, அசா.10 சீதாலெட்சுமி அசா.11 ராமலெட்சுமி அசா.12 பொன்பாண்டி, அசா.13 சாந்தி அசா.14 குணசீலன், அசா.15 முத்துலெட்சுமி அசா.16 செல்வகுமாரி ஆகியோரை தெரியாது அசா.17 முருகன் என்பவரை தெரியும். அசா.18 சரோஜா, அசா.19 குமரேசன் அசா.20 மணிராஜ், அசா.21 பொன் சேகர் அசா.22 சுதா . அசா.23 ரவிகுமார், அசா.24 ஜெயஜோதி, அசா.25 ஜானகி அசா.26 பவளக்கொடி அசா.27 தெய்வகனி அசா.28 செல்வன் அசா.29 குற்றாலராமசுந்தரம் மகன் மாயவன் அசா.30 அருள்ஜெலஸ்டீன், அசா.31 அன்னபூரணி அசா.32 ஜோசப் அந்தோணி ராஜ் அசா.33 முத்துக்கனியை அசா.34 வசுமதி அசா.35 இருளப்பன் அசா.36 முருகன் ஆகியோரை தெரியாது. அசா.37 கெலின் ஞானபிரகாசம் தெரியும். அசா.38 மரியசுந்தரி அசா.39 தேன் மொழி, அசா.40 புஷ்பவள்ளி ஆகியோரை தெரியாது. சுமார் 6,7 வருடங்களுக்கு முன்பு எதிரியிடம் நான் சீட்டு போட்டிருந்தேன். எதிரிகள் 7 குழுக்களாக சீட்டு

நடத்தினார்கள். ரூ.60000 சீட்டில் 2 சீட்டுகள் சேர்ந்திருந்தேன். மொத்தம் ரூ.14700 கட்டி இருந்தேன். மாயவன் கோவிலில் ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணியளவில் சீட்டு பணத்தை கட்டினேன். சீட்டு பணத்தை பெற்றுக் கொண்டு நோட்டில் வரவு வைத்து விடுவார்கள்.

பின்னர் சீட்டு பணத்தை கட்ட சொன்ன போது அங்கு ஆள் இல்லை, ஓடிப்போய் விட்டார்கள் என்று சொன்னார்கள். பின்னர் 6,7 மாதம் கழித்து வந்ததாக சொன்னார்கள். கிருஷ்ணன் என்பவர் புகார் கொடுத்ததாக சொன்னார்கள். நான் கட்டிய சீட்டு பணம் தற்போது வரை கிடைக்கவில்லை. கோவிலில் நம்பிக்கையாக சீட்டு போட்டிருந்ததால் நானும் சீட்டு போட்டேன். போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

மாயவன் கோவில் நிர்வாகம் சம்பந்தமாக மகேஷ் மாயவனுக்கும், எதிரி மாயவனுக்கும் பிரச்சினை இருந்தது என்றால் தெரியாது. புகார் கொடுத்தாக சொல்லப்படும் கிருஷ்ணன் தகப்பனார் பெயர் தெரியாது. புகாரில் என்ன எழுத பட்டிருந்தது என்ற விவரம் தெரியாது. புகாரில் எத்தனை பேர் கையெழுத்து செய்திருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. மாயவன் என்ன வேலை பார்க்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் வாத்தியார் வேலை. எங்கு வாத்தியார் வேலை பார்க்கிறார்கள் என்ற விவரம் தெரியாது. சீட்டு பணம் பிரிக்காமல் தலைமறைவாகி விட்டார்கள் என்று நான் தனிப்பட்ட முறையில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை போலிஸார் என்னை விசரிக்கும் போது எத்தனை சீட்டு பேட்டிருந்தேன், எவ்வுளவு தொகை கட்டியிருந்தேன் என எழுதி கொடுத்திருந்தேன் என்றால் சரிதான். நான் செலுத்தியதாக சொல்லும் சீட்டில் மொத்தம் எத்தனை உறுப்பினர்கள் என்றால் தெரியாது. ஒவ்வொரு வாரமும் எவ்வுளவு பணம் நான் செலுத்தினேன் என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால் ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு தொகை செலுத்துவேன். ஆனால் எவ்வுளவு எவ்வுளவு செலுத்தினனே் என்று தெரியாது. ரூ.14700 கட்டியதாக எதை வைத்து சொல்கிறேன் என்றால் புகார் கொடுக்கும் போது கணக்கு சொல்லியதை வைத்து சொல்கிறேன். அந்த கணக்கு விவரத்தை சொன்னது கிருஷ்ணன் என்றால் சரிதான். நான் காவல்நிலையம் சென்றேனா என்றால் சென்றேன். சுமார் 50 பேர் சென்றிருப்போம். ஒவ்வொருவருக்கும் எவ்வுளவு தொகை என்று கிருஷ்ணன் சொன்னாரா என்றால் எனக்கு சொன்னது கிருஷ்ணன் மற்றவர்கள் பற்றி தெரியாது. புகாரில் மொதம் எத்தனை பேர் கையெழுத்து போட்டார்கள் என்றால் நான் கையெழுத்து போட்டேன் மற்றவர்கள் பற்றி தெரியாது. நான் கையெழுத்து போடுவதற்கு முன்பு யாரும் கையெழுத்து போட்டிருந்தார்களா என்றால் நான் கவனிக்கவில்லை. நான் எவ்வுளவு பணம் செலுத்தினனேன் என்று கிருஷ்ணன் வைத்திருந்த நோட்டை பார்த்து சொன்னார என்றால் சரிதான். நான் சொல்வது போல் எதிரி எவ்வித சீட்டு பணமும் நடத்தி இருப்பது கிடையாது என்றாலும் நான் சொல்லும் கிருஷ்ணன் தரப்பினுருக்கும் எதிரி தரப்பிற்கு கோவிலை நிர்வாகம் செய்வது சம்பந்தமாக பிரச்சினை இருந்து வருவதால் எதிரியை நிர்வாகம் சம்பந்தமாக

எவ்வித பிரச்சினையும் அவர்களிடம் செய்யக்கூடாது என்பதற்காக அவர்கள் கொடுத்த பொய் புகாரின் பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும்இல்லை என்றால் சரியல்ல.

**<u>2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னை விசாரித்தது ஆண் போலிஸா, பெண் போலிஸா என்றால் ஞாபகம் இல்லை. எவ்வுளவு நாள் கழித்து விசாரித்தார்கள் என்றால் ஒரு மாதத்திற்குள் விசாரித்தார்கள். சீட்டை எடுத்தவர்கள் கழிவு இல்லாமல் முழு தொகையும் கட்ட வேண்டும் என்றால் சரிதான். கழிவு இல்லாமல் எவ்வுளவு கட்ட வேண்டும் என்றால் நான் சீட்டு எடுக்காததால் எனக்கு தெரியாது. ஒவ்வொரு வாரமும் நான் ஏலத்தில் கலந்து கொள்வேன் என்றால் நான் கட்டி விட்டு வந்து விடுவேன். சீட்டு பணத்தை நான் நேரடியாக கொடுப்பேனா என்றால் ஒரு சில சமயம் நான் செலுத்துவேன், ஒரு சில சமயம் யாரிடமாவது கொடுத்து அனுப்புவேன். ரூ.60000 சீட்டில் வாரம் எவ்வுளவு ஏலம் போகும் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அசா.1 கிருஷ்ணன் வைத்திருந்த நோட்டில் வாரம் எவ்வுளவு ஏலம் போகும் என்று எழுதி இருக்கும் என்றால் சரிதான். இரண்டாவது ஏல சீட்டு மாயவன் கோவில் நன்மைக்காக எடுத்து கொள்வார்கள் என்றால் சரிதான். ஒவ்வொரு வாரமும் ஏலம் எடுப்பவர்களிடம் பணத்தை கழிவு போக கொடுத்து விடுவார்கள் என்றால் தெரியாது. நான் எத்தனை வாரம் சீட்டு பணம் செலுத்தினேன் என்றால் தெரியாது. இந்த விவரம் அசா.1 கிருஷ்ணனுக்கு தெரியும் என்றால் சரிதான். நான் சொல்வது போல் முதல் விசாரணையில் சொன்ன மாதிரி இரண்டாவது ஏதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. எதிரியோ, அவருக்கு வேண்டபட்டவர் யாரோ தனிப்பட்ட முறையில் சீட்டு நடத்தப்படவில்லை என்றால் சரியல்ல.

(1வது எதிரியின் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக இரண்டாவது எதிரி தரப்பு வழக்கறிஞரால் கூறப்பட்டது.)

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

**

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 563/2024 |
| | : | Prosecution P.W - 40 |
| NAME | : | புஷ்பவள்ளி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 22.07.2025

முதல் விசாரணை

நான் தற்போது வெய்க்காலிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் பீடிசுத்தும் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளிடம் சீட்டு போட்டிருந்தேன். அசா.1 கிருஷ்ணன் என்பவரை தெரியும், அசா.2 அந்தோணிராஜ் அசா.3 டேவிட் அமல்ராஜ் ஆகியோரை தெரியாது. அசா.4 செல்வராஜ் என்பவரை தெரியும். அசா.5 ஜோசப்ராஜ் தெரியாது. அசா.6 அருமைகிளி அசா.7 பாலமுருகன் அசா,8 செல்வராணி அசா.9 பூங்கொடி சூசை ஆகியோரை தெரியாது. அசா.10 சீதாலெட்சுமி அசா.11 ராமலெட்சுமி தெரியும் அசா.12 பொன்பாண்டி, அசா.13 சாந்தி அசா.14 குணசீலன், அசா.15 முத்துலெட்சுமி அசா.16 செல்வகுமாரி அசா.17 முருகன் அசா.18 சரோஜா ஆகியோரை தெரியாது. அசா.19 குமரேசன் என்பவரை தெரியும். அசா.20 மணிராஜ், அசா.21 பொன் சேகர் ஆகியோரை தெரியாது. அசா.22 சுதா . அசா.23 ரவிகுமார், அசா.24 ஜெயஜோதி, அசா.25 ஜானகி ஆகியோரை தெரியாது. அசா.26 பவளக்கொடி தெரியும், அசா.27 தெய்வகனி அசா.28 செல்வன் ஆகியோரை தெரியும். அசா.29 குற்றாலராமசுந்தரம் மகன் மாயவன் தெரியாது அசா.30 அருள்ஜெலஸ்டீன், அசா.31 அன்னபூரணி ஆகியோரை தெரியாது. அசா.32 ஜோசப் அந்தோணி ராஜ் தெரியாது அசா.33 முத்துக்கனியை தெரியாது

அசா.34 வசுமதியை தெரியும். அசா.35 இருளப்பன் தெரியும் அசா.36 முருகன் என்பவரை தெரியாது. அசா.37 கெலின் ஞானபிரகாசம் தெரியாது . அசா.38 மரியசுந்தரி என்பவரை தெரியும். அசா.39 தேன் மொழி தெரியும். மேற்படி நான் தெரியும் என்று சொன்ன நபர்கள் என் சொந்தக்காரர்கள், என் ஊர்க்காரர்கள்.

சுமார் 8 வருடங்களுக்கு முன்பு ஆஜர் எதிரிகளிடம் சீட்டு போட்டிருந்தேன். ஆஜர் எதிரிகள் 7 குழுக்களாக சீட்டு நடத்தி கொண்டிருந்தார்கள். நான் ரூ.60000 சீட்டில் 1 சீட்டும் ரூ.30000 சீட்டில் 2 சீட்டுகளும் சேர்ந்திருந்தேன். நான் ரூ.28000 கட்டி இருந்தேன். நான் சீட்டு பணத்தை ஞாயிற்றுக்கிழமைகளில் இரவு 7 மணிக்கு மாயவன் கோவிலில்வைத்து எதிரிகளிடம் கொடுப்பேன். சீட்டு பணத்தை வாங்கி கொண்டு நோட்டில் வரவு வைப்பார்கள். 8 மாதம் சீட்டு பணம் கட்டவில்லை. எப்போதும் போல் நாங்கள் சீட்டு பணத்தை கட்ட சென்ற போது ஆள் இல்லை, ஊரை விட்டு போய்விட்டதாக சொன்னார்கள். அதன் பிறகு 8 மாதம் கழித்து திரும்ப வந்தார்கள். எல்லாரும் மொத்தமாக கேட்க சென்ற போது பணம் தரமுடியாது என்று சொன்னார்கள். வரவு வைத்த நோட்டை தீ வைத்து எரித்து விட்டதாக சொன்னார்கள். நம்ம ஊரு வாத்தியார் என்பதால் நம்பிக்கையின் பேரில் சீட்டு போட்டேன். கட்டிய பணம் திரும்ப வரவில்லை. எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க கிருஷ்ணன் புகார் கொடுத்தார் அவருடன் நாங்கள் மாயவன் கோவிலுக்கு சென்றிருந்தோம். போலிஸார் விசாரித்தார்கள்.

**<u>1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் மாயவன் கோவில் வரிதாரரா என்றால் இல்லை. நான் தெரியும் என்று சொன்ன நபர்கள் மாயவன் கோவில் வரிதாரர்களா என்றால் இல்லை. கிருஷ்ணன் வரிதாரர். கோவிலை யார் நிர்வாகம் செய்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் செலுத்தியதாக சொல்லும் சீட்டு பணம் கோவிலின் நன்மைக்காக நடத்தப்பட்டது என்றால் 2 வது சீட்டு கோவிலின் நன்மைக்காக எடுத்து கொள்ளபடும். புகாரை கொடுத்தது யார் என்றால் கிருஷ்ணன். புகாரை படித்து பார்த்தேன். அந்த புகாரில் நான் எத்தனை சீட்டு சேர்ந்திருந்தேன் என்றும் எவ்வுளவு தொகை செலுத்தி இருந்தேன் என்றும் சொல்லபட்டுள்ளது என்றால் சரிதான். அந்த புகாரில் நாங்கள் 30 பேருக்கும் அதிகமாக கையெழுத்து செய்திருந்தோம். அந்த 30 பேருக்கு அதிகமாக கையெழுத்து போட்ட அனைவரும் எத்தனை சீட்டுகள் போட்டார்கள் என்றும் எவ்வுளவு தொகை செலுத்தினார்கள் என்றும் சொல்லபட்டிருந்ததா என்றால் சொல்லபட்டிருந்தது. இந்த இரண்டு சீட்டுகளை தவிர அதற்கு முன்பு வேறு சீட்டு போட்டிருந்தேனா என்றால் போட்டிருந்தேன். எதிரி மாயவநாதனின் அப்பா பெயர் எனக்கு தெரியாது. எதிரி மாயவனின் அப்பா பெயர் தெரியாது. என்னை போலிஸார் விசாரித்தாக சொல்லும் போது எத்தனை சீட்டு போட்டிருந்தேன் என்றும் எவ்வுளவு பணம் செலுத்தி இருந்தேன் என்றும் எழுதி கொடுத்தேன் என்றால் சரிதான்.

30 க்கும் அதிகமான பேர் எத்தனை சீட்டு போட்டார்கள், எவ்வுளவு தொகை செலுத்தி உள்ளார்கள் என எழுதி கொடுத்துள்ளார்கள்

என்றால் சரிதான். நான் ஒவ்வொரு வாரமும் சீட்டு பணம் கழிவு போக தான் கட்டுவேன். ஒவ்வொரு சீட்டு பணத்திற்கும் கழிவு வித்தியாச படும் என்றால் சரிதான். ஒவ்வொரு வாரமும் நான் எவ்வுளவு சீட்டு பணம் செலுத்தி உள்ளேன் என்ற விவரத்தை போலிஸாரிடம் சொல்லி உள்ளேன் என்றால் சொல்லி உள்ளேன். நான் செலுத்தியதாக சொல்லும் ரூ.30000 மற்றும் ரூ.60000 சீட்டில் மொத்தம் எத்தனை உறுப்பினர்கள் என்ற விவரம் தெரியாது. நான் கொடுக்கும் பணத்தை வரவு வைத்த நோட்டை எரித்து விட்டதாக தற்போது சொல்லி உள்ள விவரத்தை எனது புகாரில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். சீட்டு பணத்தை செலுத்துவது நானா, எனது கணவரா என்றால் எனது மாமியார் சீட்டு என் கணவர் கருணாகரன் பெயரில் இருந்தது. காவல்நிலையத்தில் புகார் கொடுத்த பின்பு 2,3 மாதங்கள் கழித்து விசாரித்தார்கள். புகார் கொடுத்தாக சொல்லப்படும் கிருஷ்ணன் தகப்பனார் பெயர் தெரியாது. நான் தெரியும் என்று சொன்ன தேன்மொழியின் கணவர் பெயர் உதயசூரியன். தேன்மொழி எனது உறவினர். சீட்டு பணம் நடத்தாமல் சென்றுவிட்டனர் என இந்த புகாருக்கு முன்பு ஏதாவது புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. 1ம் எதிரி மாயவன் ஆசிரியர் என்றால் சரிதான்.

8 மாதமாக எங்களிடம் சீட்டு பணம் பிரிக்காததால் ஊரை விட்டு போய்விட்டதாக சொல்லபடும் காலகட்டத்தில் பள்ளியில் தான் ஆசிரியராக பணிபுரிந்தார் என்றால் சரிதான். என்னை போலிஸார் விசாரிக்கும் போது சீட்டு பணத்தை என் மாமியார் தான் என் கணவர்பெயரில் செலுத்துவார் என சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். புகார் கொடுத்ததாக சொல்லபடும் கிருஷ்னன் வகையறாவுக்கும், வாத்தியார் வகையறாவுக்கும் கோவில் நிர்வாகம் சம்பந்தமாக பிரச்சினை உள்ளது என்றால் தெரியாது. நான் சொல்வது போல் இந்த எதிரி எந்த காலத்திலும் எவ்விதசீட்டு பணமும் நடத்தியது கிடையாது என்றாலும் நான் சொல்வது போல் 8 மாதமாக அவர் ஊரை விட்டு தலைமறைவாகி விட்டார் என்பது கிடையாது என்றாலும் சரியல்ல. அசா.1 கிருஷ்ணனின் ஏற்பாட்டின் பேரில் 1வது எதிரியின் மீதுள்ள முன்பகை காரணமாக கொடுக்கப்பட்ட பொய் புகாரின் பெயரில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. எதிரிகளிடம் நான் சொல்வது போல் நானும் நான் சொல்லும் நபர்களும் எந்த காலத்திலும் சீட்டு பணம் கேட்டிருப்பது கிடையாது என்றால் சரியல்ல.

**<u>2வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனது முதல் விசாரணையில் சொல்லி உள்ள விவரத்தை தான் போலிஸ் விசாரணையிலும் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். ரூ. 30000 சீட்டிற்கு வாரம் ரூ.300 கட்ட வேண்டும். ரூ.33000 சீட்டிற்கும் வாரம் ரூ.300 தான் கட்ட வேண்டும். ரூ.61000 சீட்டிற்கு வாரம் ரூ. 500 கட்ட வேண்டும். நான் முழு பணமும் கட்டமாட்டேன் என்றாலும் கழிவு போக தான் கட்டுவேன் என்றாலும் சரிதான். ஒரு சீட்டிற்கு எவ்வுளவு கழிவோ அதே

போன்று தான் 4 சீட்டுகள் என்றாலும் கழிவு வரும் என்றால் சரிதான். என் பெயரில் சீட்டு போடவில்லை என்றாலும் என் கணவர் பெயரில் சீட்டு போடபட்டது என்றாலும் சரிதான். வாரம் எவ்வுளவு ஏலம் போகும் என்று என் மாமியாருக்கு தான் தெரியும் என்றால் சரிதான். யாரெல்லாம் ஏலம் கேட்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றாலும் என் மாமியாருக்கு தான் தெரியும் என்றாலும் சரிதான். சீட்டு பண வரவு செலவு கூட என் மாமியாருக்கு தான் தெரியும் என்றால் சீட்டு பணம் பற்றி எனக்கு தெரியும். ஆனால் மாயவன் கோவிலுக்கு சீட்டு பணம் கட்ட நான் சென்றது கிடையாது. என் மாமியாரை விசாரித்தால் முழு விவரமும் தெரியவரும் என்றால் சரிதான். இரண்டாவது சீட்டு மாயவன் கோவிலுக்கு என்றால் சரிதான். ஏலம் கேட்ட நபருக்கு தொகையை கையில் கொடுத்து விடுவார்கள் என்றால் சரிதான்.

ரூ.30000 சீட்டு எத்தனை வாரம் கட்டி உள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. ரூ.60000 சீட்டு எத்தனை வாரம் கட்டி உள்ளேன் 11 மாதம் கட்டி இருப்போம். 11 மாதமாக ஏலம் எடுத்தவர்களும் சீட்டு பணத்தை கட்டவில்லை என்றால் தெரியாது. நான் சொல்வது போல் முதல் விசாரணையில் சொன்ன மாதிரி இரண்டாவது ஏதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. எதிரியோ, அவருக்கு வேண்டபட்டவர் யாரோ தனிப்பட்ட முறையில் சீட்டு நடத்தப்படவில்லை என்றால் சரியல்ல.

(1வது எதிரியின் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக இரண்டாசது எதிரி தரப்பு வழக்கறிஞரால் கூறப்பட்டது.)

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi